தினமலர்
06.09.2019,கோவைபக்கம்-4

# கே.பி.ஆர்., கல்லூரியில் ஆசிரியர் தின விழா

**சூலூர், செப். 6 –**

கே.பி.ஆர்., பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில், ஆசிரியர் தின விழா நடந்தது.

எழுத்தாளர் மரபின் மைந்தன் முத்தையா பேசுகையில், ''மாணவனின் திறமையை முதலில் கண்டு பிடிப்பவர் ஆசிரியர்தான். அதனால், ஒவ்வொரு நாளும் ஆசிரியர்களை நாம் கொண்டாட வேண்டும்,'' என்றார்.

விழாவுக்கு, கே.பி. ஆர்.குழும தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். கலை நிகழ்ச்சிகள் களை கட்டின. கல்லூரி முதல்வர் பொம்மண்ணராஜா, முதன்மை செயலர் நடராஜன், கலைக்கல்லூரி முதல்வர் பாலுசாமி மற்றும் துறைத்தலைவர்கள் பங்கேற்றனர். மாணவர்களால் தேர்வு செய்யப்பட்ட சிறந்த ஆசிரியர்கள் கவுரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்பட்டன.